செ.வெ.எண் 93 நாள் 28.1.2010

## தமிழ்நாடு அரசு
## உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
## மாநில நுகர்வோர் சேவை மையம்
## வீட்டு மனைகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வாங்குவோர்க்கான சிறப்பு ஆலோசனை நேரம்

தமிழ் நாடு அரசு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் செயல்படும் மாநில நுகர்வோர் சேவை மையத்தில் 044–28592828 என்ற தொலைபேசி வாயிலாகவும், **www.consumer.tn.gov.in** என்ற இணைய தள சேவை வாயிலாகவும் நுகர்வோர்களுக்கு நேரும் ஐயப்பாடுகளுக்கு விளக்கங்கள் வழங்கப்படுவதுடன் நுகர்வோர்கள் வழங்கும் புகார்கள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. பெரும்பாலான நுகர்வோர் அமைப்புகள் வழங்கிய கோரிக்கைகளின் அடிப்படையில் மாநில நுகர்வோர் சேவை மையம் வாயிலாக குறிப்பிட்ட தினங்களில் ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவை வாங்குமுன் நுகர்வோர்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு விளக்கங்கள் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய வீட்டு மனைகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வாங்கும் போது நுகர்வோர்கள் ஏமாற்றுதல், பொய்யான வாக்குறுதிகள், தரக்குறைவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கின்றனர். இவ்வாறு நுகர்வோர் உரிமைகள் மீறப்படுகின்றன, இதனை தடுக்க நுகர்வோர்கள் மத்தியில் ஒரு வீட்டு மனை அல்லது அடுக்கு மாடி வீடு வாங்குமுன் கவனத்தில் கொள்ள வேண்டிய பல்வேறு விஷயங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது, இச்சீரிய நடவடிக்கையின் முதற்கட்டமாக **30.01.2010** சனிக்கிழமையன்று காலை **10-00** மணி முதல் பிற்பகல் **01-00** மணி முடிய வீட்டு மனைகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வாங்கக்கூடிய நுகர்வோர்களுக்கு நேரும் பிரச்சனைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படும். வீட்டு மனைகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வாங்கும் நுகர்வோர்கள் **044-28592828** என்ற தொலைபேசி

**வாயிலாக மாநில நுகர்வோர் சேவை மையத்தினை மேற்படி நேரத்தில் தொடர்பு கொள்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினை சார்ந்த உயர் அலுவலர்களும், நுகர்வோர் அமைப்புகளை சார்ந்த மூத்த நுகர்வோர் பாதுகாப்பு ஆர்வலர்களும், ஒரு வழக்கறிஞரும் நுகர்வோர்களுக்கு உரிய விளக்கங்கள் வழங்குவார்கள். பொது மக்கள் இச்சீரிய சேவையினை பயன்படுத்தி வீடு, மனை மற்றும் நில உடமைகள் வர்த்தகத்தில் நேர்மையற்ற வணிக முறைகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வரும் காலங்களில் மாதம் ஒரு முறை இதே போன்று மாநில நுகர்வோர் சேவை மையம் தொலைபேசி மூலம் மற்ற பொருள் / சேவையில் நுகர்வோர் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது,**

**ஆணையாளர்**

வெளியீடு, இயக்குநர், செ.ம.தொ.துறை, சென்னை 9.